**அக்டோபர் – 07**

# TNPSC துளிகள்

- இந்திய வானிலை ஆய்வுத் துறையானது அரபிக் கடலில் உருவாகி வரும் ‘சக்தி’ புயல் காரணமாக (IMD) மகாராஷ்டிராவிற்கு புயல் எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூரில் நடைபெற்ற 62வது தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த கிராண்ட்மாஸ்டர் P. இனியன் பட்டம் வென்றார்.
- நார்வேயின் ஃபோர்து எனுமிடத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உலக பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியின் 48 கிலோ கிராம் எடைப் பிரிவில் இந்திய பளுதூக்கும் வீராங்கனை மீராபாய் சானு வெள்ளி வென்றார்.
- இலண்டன் ஃபேஷன் வீக் கண்காட்சியில் பாரம்பரிய பவானி ஜமக்காளம் இடம் பெற்றதுடன், அது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றது.
    - துபாயைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் வினோ சுப்ராஜாவின் ‘WEAVE: A Bhavani Tribute’ தொகுப்பில் இந்த ஜமக்காளத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஆடம்பர கைப்பைகள் மற்றும் ஆபரணங்கள் இடம் பெற்றன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## காவிரி டெல்டா பகுதியில் சம்பா நெல் சாகுபடி

A compilation of Samba coverage in Cauvery delta (in acres)

| District | 2022-23* (Direct-sown) | 2022-23* (Total)*** | 2023-24** (Direct-sown) | 2023-24** (Total)*** |
|---|---|---|---|---|
| Cuddalore | 9,428 | 27,916 | 28,311 | 33,263 |
| Tiruchi | - | 12 | - | 89 |
| Karur | - | 1,420 | - | - |
| Ariyalur | - | 1,200 | - | 420 |
| Pudukottai | 1,608 | 3,213 | 2,631 | 2,631 |
| Thanjavur | 5,511 | 30,060 | 2,806 | 23,882 |
| Nagapattinam | 79,534 | 88,922 | 49,163 | 49,731 |
| Mayiladuthurai | 3,754 | 9,994 | 5,281 | 5,928 |
| Tiruvarur | 1,08,789 | 1,68,521 | 32,540 | 60,732 |
| Total | 2,08,624 | 3,31,258 | 1,20,732 | 1,76,676 |



- காவிரி டெல்டா பகுதியில் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 3.2 லட்சம் ஏக்கர் பரப்பளவாக இருந்த, சம்பா சாகுபடி பரப்பானது இந்த ஆண்டு 1 லட்சம் ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
- பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையே பருவக் காற்று சாரா மழைப் பொழிவு காரணமாக குறுவை சாகுபடியில் விதைப்பு தாமதமாக நடந்ததால் இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
- நெல் சாகுபடிப் பரப்பானது இந்த ஆண்டு குறுவை சாகுபடி பருவத்தில், 6 லட்சம் ஏக்கருக்கு மேல் அதிகரித்துள்ளது என்ற நிலையில் இது வழக்கமான 4.4 லட்சம் ஏக்கரை விடவும், முந்தைய ஆண்டு 3.9 லட்சம் ஏக்கரை விடவும் அதிகமாகும்.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் சுமார் 25% வயல்கள் செப்டம்பர் மாத இறுதி வரை அறுவடை செய்யப்படாமல் இருந்ததுடன் குறுவை சாகுபடியில் ஏற்பட்ட அறுவடை தாமதமானது, சம்பா சாகுபடி விதைப்பினை சரியான நேரத்தில் விதைப்பதைப்

பாதிக்கிறது.

- 2023–24 ஆம் ஆண்டில் காவிரி டெல்டா 26.9 லட்சம் டன் அல்லது தமிழ்நாட்டின் 70.5 லட்சம் டன் நெல் உற்பத்தியில் 38% பங்கினைக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை

- 2026–27 ஆம் ஆண்டின் சந்தைப்படுத்தல் பருவத்திற்கான அனைத்து கட்டாய ராபி பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைகளை (MSP) உயர்த்துவதற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) ஒப்புதல் அளித்தது.
- குங்குமப் பூவின் அதிகபட்ச MSP உயர்வு ஆனது குவிண்டாலுக்கு 600 ரூபாய் ஆகும்.
- அதைத் தொடர்ந்து, குவிண்டாலுக்கு பருப்பு வகைகளுக்கு (மசூர்) 300 ரூபாய், ராப்சீட் மற்றும் கடுகு ஆகியவற்றிற்கு 250 ரூபாய், கடலைப் பருப்பிற்கு 225 ரூபாய், பார்லிக்கு 170 ரூபாய், மற்றும் கோதுமை 160 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2025–26 முதல் 2030–31 ஆம் ஆண்டு வரையில் உள்நாட்டு உற்பத்தியை 350 லட்சம் டன்களாக உயர்த்துவதற்காக 11,440 கோடி ரூபாய் செலவில் பருப்பு வகைகளின் உற்பத்தியில் ஆத்மநிர்பாரதா (தன்னிறைவு) திட்டத்தினையும் மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
- பருப்பு வகைகள் திட்டம் ஆனது மேம்படுத்தப்பட்ட விதைகள், அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பு மற்றும் பருவநிலைக்கு ஏற்ற பயிர் வகைகளை கொள்முதல் செய்வதன் மூலம் இரண்டு கோடி விவசாயிகளுக்குப் பயனளிக்கும்.

| S. No. | Crops | MSP RMS 2026-27 | Cost of Production RMS 2026-27 | Margin over cost (in percent) | MSP RMS 2025-26 | Increase in MSP (Absolute) |
|---|---|---|---|---|---|---|
| 1 | Wheat | 2585 | 1239 | 109 | 2425 | 160 |
| 2 | Barley | 2150 | 1361 | 58 | 1980 | 170 |
| 3 | Gram | 5875 | 3699 | 59 | 5650 | 225 |
| 4 | Lentil (Masur) | 7000 | 3705 | 89 | 6700 | 300 |
| 5 | Rapeseed & Mustard | 6200 | 3210 | 93 | 5950 | 250 |
| 6 | Safflower | 6540 | 4360 | 50 | 5940 | 600 |


## உயர் இலட்சியமிக்க வேளாண் மாவட்டங்கள்

- 100 உயர் இலட்சியமிக்க வேளாண் மாவட்டங்களை உருவாக்குவதற்காக அரசாங்கம் பிரதான் மந்திரி தன்-தான்யா கிருஷி யோஜனா (PMDDKY) திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது, உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 12 மாவட்டங்களுடன் 29 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கியது.
- இந்தத் திட்டமானது, வேளாண் உற்பத்தித்திறன், பயிர் பல்வகைப்படுத்தல், நீர்ப் பாசனம் மற்றும் கடன் அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PMDDKY ஆனது, தனி நிதி ஒதுக்கீட்டுத் திட்டம் இல்லாமல், தற்போதுள்ள 11 அரசுத் துறைகளைச் சேர்ந்த 36 திட்டங்களைப் பயன்படுத்தும்.

- குறைந்த உற்பத்தித்திறன், மிதமான பயிர் தீவிரம் மற்றும் கடன் அணுகல் குறைவாக இருத்தல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு இந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன.




## பழங்குடியின கிராமங்களுக்கான தொலைநோக்குத் திட்டம் 2030 அறிவிப்பு




- பழங்குடியின கிராமங்களுக்கான தொலைநோக்குத் திட்டம் 2030 அறிவிப்பு ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று சிறப்பு கிராம சபைகளில் நிறைவேற்றப்பட்டது.

- உலகின் மிகப்பெரியப் பழங்குடியின அடிமட்ட தலைமைத்துவத் திட்டமான ஆதி கர்மயோகி அபியான் திட்டத்தினை பழங்குடியின விவகார அமைச்சகம் தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, 30 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 1 லட்சம் கிராமங்கள் மற்றும் தோலாக்களில் 11.5 கோடிக்கும் மேற்பட்ட பழங்குடியினக் குடிமக்களை சென்றடைந்தது.
- கிராமவாசிகளிடமிருந்து பெறப்படும் வாராந்திர தன்னார்வ சேவையுடன் ஒரு லட்சம் ஆதி சேவா மையங்கள் அல்லது குடிமக்கள் சேவை மையங்கள் நிறுவப்படுகின்றன.
- செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் ஆதி வாணி செயலி, பழங்குடியின சமூகங்களை அவர்களது தாய்மொழிகளில் அரசு அதிகாரிகளுடன் இணைக்கிறது, இதன் மூலம் நிகழ்நேர தகவல் தொடர்பு கிடைக்கப்பெறும்.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், 20 லட்சம் அதிகாரிகள், சுய உதவிக்குழுப் பெண்கள் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் அரசுத் திட்டங்களை கடை நிலை வரை வழங்குவதை உறுதி செய்வதற்காக ஆதி கர்மயோகிகளாகப் பயிற்சி பெற்றுள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## MLAT – சிங்கப்பூர்



Legendary Assamese Singer Zubeen Garg Dies in Scuba Diving Accident in Singapore

- பிரபல இந்தியப் பாடகரும் அசாமின் முக்கியக் கலாச்சார நபருமான ஜூபீன் கார்க் சிங்கப்பூரில் உயிரிழந்தார்.
- அவர் மயக்க நிலையில் கண்டறியப்பட்ட தீவினை நினைவு கூரும் விதமாக அந்தத் தீவின் பெயரானது கூகுள் மேப் தளத்தில் "ஜுபீன் கார்க் தீவு" என்று மாற்றப் பட்டு உள்ளது.

- அசாம் அரசானது, 10 பேர் கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழுவை (SIT) அமைத்துள்ளது.
- விசாரணையில் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக சிங்கப்பூர் அரசுடன் பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தத்தை (MLAT) மத்திய அரசு செயல்படுத்தியுள்ளது.

## நேட்டோ நாடுகளின் குழாய் அமைப்புத் திட்டத்தில் (NPS) போலந்து




- போலந்து நாடானது, 4.7 பில்லியன் யூரோ மதிப்பிலான NATO/நேட்டோ (வட அட்லாண்டிக் நாடுகளின் ஒப்பந்த அமைப்பு) நாடுகளின் குழாய் அமைப்பில் (NPS) இணைவதற்கான திட்டத்தை அறிவித்துள்ளது.
- NATO குழாய் அமைப்பு என்பது ஐரோப்பா முழுவதும் இராணுவ நடவடிக்கைகளுக்கான எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் வழங்கும் 10,000 கிலோ மீட்டர் நீளத்திலான வலையமைப்பாகும்.
- பனிப்போரின் போது, போலந்து வார்சா ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருந்தது எனவே நேட்டோ குழாய் இணைப்புகள் ரஷ்யா மற்றும் பெலாரஸுக்கு அருகிலுள்ள அதன் தளங்கள் வரை அமைக்கப்படவில்லை.
- ஜெர்மனியிலிருந்து நேட்டோவின் கூட்டுப் படைப் பயிற்சி மையத்தின் தாயகமான பைட்கோஸ் பகுதியில் உள்ள அதன் இராணுவ தளத்திற்கு 300 கிலோ மீட்டர் நீளக் குழாய் இணைப்பினை அமைக்க போலந்து திட்டமிட்டுள்ளது.
- போலந்து மற்றும் PERN ஆகியவற்றினால் கட்டமைக்கப்பட்டு இயக்கப்படும் இந்தத் திட்டமானது 32 நேட்டோ நட்பு நாடுகளின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது போலந்து நாடானது நேட்டோ நாடுகளின் அதிக இராணுவ செலவினங்களைக் கொண்ட நாடாகும் மற்றும் ரஷ்யாவுடனான தொடர்ச்சியான பதட்ட சூழல்களுக்கு மத்தியில் உக்ரைனின் முக்கிய நட்பு நாடாகவும் உள்ளது.

## நிகரச் சுழிய உமிழ்வுகளுக்கான வங்கிக் கூட்டணி

- வங்கித் துறையின் கார்பன் நீக்கத்தினை முன்னெடுப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நிகரச் சுழிய உமிழ்விற்கான வங்கிக் கூட்டணி (NZBA)

செயல்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருகிறது.

- ❖ அமெரிக்க அரசியல் நெருக்கடி மற்றும் நம்பிக்கைக்கு எதிரான கவலைகளுக்கு மத்தியில் உலக வங்கிகள் பெருமளவில் வெளியேறியதைத் தொடர்ந்து இந்த நிறுத்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ NZBA கூட்டணியின் பருவநிலை சார் இலக்கு நிர்ணய வழிகாட்டுதல் ஆனது வங்கிகள் பயன்படுத்துவதற்குக் கிடைக்கப்பெறும்.
- ❖ இந்த நிறுத்தம் ஆனது, காப்பீடு மற்றும் சொத்து மேலாண்மைத் தொழில் துறைகளில் பருவநிலை முன்னெடுப்புகளின் சமீபத்திய நிறுத்தங்களைப் போன்றது.




## பொருளாதாரச் செய்திகள்

### வரிகளின் உறுதித்தன்மையினை மேம்படுத்துதல் குறித்த திட்டமிடல் ஆவண அறிக்கை



- ❖ நிதி ஆயோக் அமைப்பானது, "Enhancing Tax Certainty in Permanent Establishment and Profit Attribution for Foreign Investors in India" என்ற தலைப்பிலான அதன் முதல் வரிக் கொள்கை திட்டமிடல் ஆவணத்தை அறிமுகப்படுத்தியது.
- ❖ வரி விதிமுறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் முன்கணிப்புத்தன்மையை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தியாவின் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் நிரந்தர நிறுவன (PE) விதிகள், இலாப பண்புக்கூறு மற்றும் தகராறு தீர்வு தொடர்பான நீண்டகாலப் பிரச்சினைகளை இந்த ஆவண

அறிக்கை நிவர்த்தி செய்கிறது.

- வழக்குகளைக் குறைப்பதற்கும், இணக்கத்தை எளிதாக்குவதற்கும், நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கான விருப்பத்தேர்வு, தொழில்துறை சார்ந்த அனுமான/முன்னறிவிப்பு வரிவிதிப்புத் திட்டத்தை இது முன்மொழிகிறது.

## ரூபாயின் உலகளாவிய பயன்பாடு




- பன்னாட்டு வர்த்தகத்திற்காக பூடான், நேபாளம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டினருக்கு ரூபாய் மதிப்பில் கடன் வழங்க இந்திய வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அனுமதித்தது.
- ரூபாய் அடிப்படையிலான பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்காக முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு வெளிப்படையான குறிப்பு விகிதங்களை RBI முன்மொழிந்தது.
- சிறப்பு ரூபாய் வோஸ்ட்ரோ வகைக் கணக்கு (SRVA) நிலுவைத் தொகைகளை பெரு நிறுவனப் பத்திரங்கள் மற்றும் வணிக ஆவணங்களில் முதலீடு செய்ய RBI அனுமதித்தது.
- இந்தியாவின் நடப்புக் கணக்கு பற்றாக்குறையானது, 2025–26 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 2.4 பில்லியன் டாலர் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2% ஆக இருந்தது என்ற நிலையில் இது 2024–25 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 8.6 பில்லியன் டாலர் அல்லது 0.9% ஆகக் குறைந்தது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதி நிலவரப்படி, 700.2 பில்லியனாக இருந்த இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு ஆனது 11 மாதங்களுக்கும் மேலான இறக்குமதிகளை மேற்கொள்ள உதவியது.

## FIDC சபைக்கு SRO அந்தஸ்து

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 03 ஆம் தேதியன்று, நிதித் தொழில் துறை மேம்பாட்டு சபைக்கு (FIDC) சுய- ஒழுங்குமுறை அமைப்பு (SRO) அந்தஸ்தை வழங்கியது.
- FIDC ஆனது, இந்தியா முழுவதும் இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வங்கி சாரா நிதி நிறுவனங்களை (NBFC) பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

- SRO அமைப்புகள் ஆனது, தொழில்துறை தரநிலைகளை உருவாக்கவும், இணக்கத்தைக் கண்காணிக்கவும், நிதி அமைப்பில் உள்ள அபாயங்களை முன்கூட்டியே கண்டறிவதை ஆதரிக்கவும் உதவுகின்றன.
- இந்த நடவடிக்கையானது நிதிச் சந்தைகளில் SRO அமைப்புகளை அங்கீகரிப்பதற்கான இந்திய ரிசர்வ் வங்கியின் 2023 ஆம் ஆண்டு கட்டமைப்பைப் பின்பற்றுகிறது.
- FIDC ஆனது தற்போது இந்திய ரிசர்வ் வங்கியுடன் இணைந்து ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்து வங்கி சாரா கடன் துறையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும்.



**RBI GRANTS FINAL SRO RECOGNITION TO FINANCE INDUSTRY DEVELOPMENT COUNCIL (FIDC)**

**Mumbai, October 3, 2025**

**Finance Industry Development Council (FIDC)**, the representative body of Non-Banking Financial Companies (NBFCs), has been granted **final recognition by the Reserve Bank of India as the Self-Regulatory Organisation (SRO) for the NBFC sector.**

This recognition is a **landmark moment** for the NBFC sector, underscoring its critical role in India's financial system and its growing contribution to financial inclusion.

"We are honoured by this recognition, which reflects the regulator's trust in FIDC as the representative body of the NBFC sector. This is both a celebration and a responsibility, and we are committed to further strengthening our role in building a more robust and resilient NBFC sector so as to enhance its role in the financial ecosystem," said **Mahesh Thakkar, Chairman, FIDC**

The recognition places NBFCs at the forefront of India's financial inclusion journey and aligns strongly with the vision of a **Viksit Bharat.**

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## SARAL கருவி





- இந்தியாவின் புதிய அறிவியல் சார் நிதி நிறுவனமான அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை (ANRF) ஆனது SARAL என்ற கருவியை உருவாக்கியுள்ளது.
- SARAL என்பது எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் தானியங்கி ஆக்கப்பட்ட ஆராய்ச்சி விரிவாக்கம் மற்றும் கற்றலைக் குறிக்கிறது.
- இது சாதாரண நபர்களும் புரிந்து கொள்ளும் வகையில் சிக்கலான அறிவியல்

ஆராய்ச்சிக் கட்டுரைகளின் அறிக்கைகளை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துகிறது.

- இந்தக் கருவி ஆனது ஒளிப்படங்கள், வலையொலிகள், தகவல் பலகைகள் மற்றும் விளக்கக்காட்சிகளை உருவாக்கி ஆராய்ச்சியை மேலும் அணுகக்கூடியதாக மாற்றும்.
- மருந்து கண்டுபிடிப்பு, விண்வெளி, பருவநிலை மற்றும் மேம்பட்ட பொருட்கள் போன்ற பகுதிகளில் உள்ளார்ந்த தொழில்நுட்பத் தயாரிப்புகள் மற்றும் புத்தொழில்களை வளர்ப்பதற்கு உள்ளார்ந்த அறிவியல் மற்றும் பொறியியலை ஆதரிப்பதை ANRF நோக்கமாகக் கொண்டுள்ளது.

## என்செலடஸ் துணைக் கோளில் சிக்கலான கரிமங்கள்




- காசினி விண்கலம் ஆனது சனிக் கோளின் துணைக்கோளான என்செலடஸிலிருந்து வெளியேற்றப்பட்ட புதிய பனித் துகள்களில் புதிய சிக்கலான கரிம மூலக்கூறுகளைக் கண்டறிந்தது.
- மேலும், இந்தக் கண்டறியப்பட்ட சேர்மங்களில் அலிபாடிக், சுழற்சி சார் எஸ்டர்கள், ஈதர்கள் மற்றும் சாத்தியமான நைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் கொண்ட மூலக்கூறுகள் அடங்கும்.
- இந்த மூலக்கூறுகள் ஆனது என்செலடஸின் நிலத்தடி கடலில் இருந்து உருவாகின்றனவே தவிர, சனிக் கோளின் E வளையத்தில் உள்ள நீண்டகாலக் கதிர்வீச்சு வெளிப்பாட்டிலிருந்து அல்ல.
- இந்தக் கண்டுபிடிப்புகள் ஆனது, என்செலடஸின் கடலில், செயலில் உள்ள சிக்கலான வேதியியலை உறுதிப்படுத்துவதால், இது ESA (ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்) எதிர்காலத்தில் அந்த துணைக்கோளின் ஓர் ஆய்வுப் பயணத்தினை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வலுப்படுத்துகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இமாச்சலப் பிரதேசத்தில் பனிச்சிறுத்தைகளின் எண்ணிக்கை

- இமாச்சலப் பிரதேசத்தில் பனிச்சிறுத்தைகளின் எண்ணிக்கையானது கடந்த நான்கு ஆண்டுகளில் 62 சதவீதம் அதிகரித்து, 2025 ஆம் ஆண்டில் 83 என்ற


எண்ணிக்கையினை எட்டியுள்ளது.

- வனத்துறையின் வனவிலங்குப் பிரிவு ஆனது 2021 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இவற்றின் கணக்கெடுப்பினை மேற்கொண்டது.
- முந்தைய மதிப்பீடுகளை விட 2021 ஆம் ஆண்டில் 51 ஆக இருந்த இவற்றின் எண்ணிக்கையானது 2025 ஆம் ஆண்டில் 83 ஆக அதிகரித்துள்ளது.
- லஹௌல்-ஸ்பிட்டி, கின்னௌர் மற்றும் பாங்கி பள்ளத்தாக்கு ஆகிய பழங்குடியின மாவட்டங்களில் பனிச்சிறுத்தைகள் தென்பட்டன.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### IUCN WCPA அறிக்கை 2025




- பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான IUCN உலக ஆணையம் (WCPA) ஆனது "பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பருவநிலை மாற்றத் தணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- பாதுகாக்கப்பட்ட மற்றும் வளங்காக்கப்பட்ட பகுதிகள் (PCAs) ஆனது பல்லுயிர் பெருக்கம், கலாச்சார வளங்களைப் பாதுகாக்கின்றன மற்றும் நிலையான மேம்பாட்டினை ஆதரிக்கின்றன.

- PCA பகுதிகள் ஆனது கார்பன் டை ஆக்சைடை அகற்றவும், கார்பன் உமிழ்வினைத் தடுக்கவும் உதவுகின்றன, மேலும் அவற்றின் வகையைப் பொறுத்து பெரிய அளவிலான கார்பன் அகற்றலை செயல்படுத்தக் கூடும்.
- 30% நிலத்தைப் பாதுகாப்பது 500 பில்லியன் டன் கார்பனை அடைத்து வைக்கக்கூடும், மேலும் 30% பெருங்கடல்களைப் பாதுகாப்பது பாரிசு உடன்படிக்கைக்குத் தேவையான 20% உமிழ்வைக் குறைக்கலாம்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இன்ஸ்பயர் விருது MANAK திட்டம்

- 2025 ஆம் ஆண்டில் இன்ஸ்பயர் விருது MANAK திட்டத்தின் கீழ் உத்தரப் பிரதேச மாநிலத்தில் 2,80,747 பரிந்துரைகள் பதிவாகியுள்ளன, இது திட்டம் தொடங்கியதிலிருந்து அதிகபட்ச எண்ணிக்கையாகும்.
- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நடத்தப்படும் இந்தத் திட்டமானது, 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களிடையே புதுமைகளை ஊக்குவிக்கிறது.
- பரிந்துரைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவின் 50 முன்னணி மாவட்டங்களுள் பிரதாப்கர் (7,085) மற்றும் பிரயாக்ராஜ் (6,929) உட்பட 22 மாவட்டங்கள் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவையாகும்.
- உத்தரப் பிரதேசம் ஆனது முறையே 1.39 லட்சம் மற்றும் 1.79 லட்சம் பரிந்துரைகள் வித்தியாசத்தில் இராஜஸ்தான் (1,41,142 பரிந்துரைகள்) மற்றும் கர்நாடகா ஆகியவற்றினை (1,01,656) முந்தியது.




# இதரச் செய்திகள்

## அந்தமானில் உள்ள புதைச்சேற்று எரிமலை

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் பாரடாங்கில் உள்ள இந்தியாவின் ஒரே புதைச்சேற்று எரிமலையானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று

வெடித்தது.

- 2005 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதன் கடைசி பெரிய வெடிப்பிற்குப் பிறகு இந்த எரிமலை செயலற்ற நிலையில் இருந்தது.
- புதைச்சேற்று எரிமலைகள் எரிமலைக்குழம்பு சார்ந்த எரிமலைகளைப் போலல்லாமல், மீத்தேன் போன்ற வாயுக்கள் சேற்று மண்ணை மேற்பரப்பில் தள்ளுவதால் புதைச் சேற்று எரிமலைகள் உருவாகின்றன.
- இந்த நிகழ்வு ஆனது பாரன் தீவில் உள்ள இந்தியாவின் ஒரே செயலில் உள்ள எரிமலையில் சமீபத்தில் ஏற்பட்ட சிறிய வெடிப்புகளிலிருந்து வேறுபட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★